பக்கங்கள் 18+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 21 திங்கட்கிழமை 03.05.2024 அதிர்வு 308

## மாமாவை வாளால் வெட்டி கொலை செய்த மருமகன்

(ரஸீன் ரஸ்மின்)



மாதம்பை, செம்பு கட்டிய பிரதேசத்தில் மருமகன் ஒருவர் அவரது மாமாவை வாளால் வெட்டிப் படுகொலை 04

# 48 மணி நேரத்துக்குள் 17 பேர் உயிரிழப்பு!
# 87 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு!!



இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் கடந்த 48 மணிநேரத்துக்குள் 17 பேர் பலியாகியுள்ளனர். அவர்களில் ஐவரின் சடலங்கள் இன்னமும் மீட்கப்படவில்லை.

மாத்தறை மாவட்டத்தில் நால்வரும், இரத்தினபுரி மாவட்டத்தில் ஐவரும், கொழும்பு மாவட்டத்தில் மூவரும் என 12 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். 04




# பொது வேட்பாளரைக் களமிறக்குவதும் தேர்தலைப் பகிஷ்கரிப்பதும் ஒன்றல்ல!

## முன்னணியின் கருத்துக்குச் சுரேஷ் பிரேமச்சந்திரன் பதிலடி;
## தமிழரசு விரைந்து முடிவெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதும் பகிஷ்கரிப்பு என்பதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுவது போல் ஒன்றல்ல எனத் தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் விரைந்து முடிவெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 03

## மொட்டுக் கட்சி எம்.பி. சஜித் பக்கம் தாவல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் திலக் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவைத் தெரிவிக்கும் நோக்கில் இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார். 04

## காலி, மாத்தறை பாடசாலைகளுக்கு தொடர்ந்து விடுமுறை




இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் மேலும் 04



# யாழில் ஐ.நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி

## பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு

(எஸ்.நிதர்ஷன்)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்ததுடன் பல்வேறுபட்ட சந்திப்புக்களிலும் ஈடுபட்டார்.

நல்லை ஆதீனத்துக்குச் சென்ற ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி, ஆதீன குரு முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரம்மாச்சார்ய சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றதுடன், நல்லூர் கந்த சுவாமி கோயிலிலும் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அவர் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு விஜயம் செய்ததுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

இந்தியா – இலங்கை இடையேயான பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்த சிறுவன் தன்வந்தைச் சந்தித்த ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி பாராட்டுக்களையும் தெரிவித்தார்.









**பொதுவேட்பாளரை...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாகப் பேசப்பட்டு வந்த நிலையில் இப்போது அது ஒரு முக்கியமான கட்டத்தை வந்து சேர்ந் திருக்கின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யானது கொள்கை ரீதியாகப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற நிலையை ஏற்கனவே எடுத்திருந்தாலும் இந்தக் கூட்டணியில் இருக்கக்கூடிய ஈ.பி. ஆர்.எல்.எவ்., ரெலோ போன்ற கட்சிகள் இந்த விடயத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்கின்ற செயற்பாடு களில் ஈடுபட்டுள்ளன.

அதாவது தமது கட்சிகளில் இருந்து ஒரு காத்திரமான ஒத்துழைப்புக்கள் வழங்க வேண்டும் என்ற அடிப்படை யில் நேற்று மட்டக்களப்பில் ஒன்று கூடிய ரெலோ உயர்மட்டக் குழு, பொது வேட்பாளர் தொடர்பான நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்குத் தாங்கள் பூரணமான ஒத்துழைப்புக்களை சகல தரப்புக்களுக்கும் வழங்குவதாக அறிவித் திருக்கின்றார்கள்.

அதேபோல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தனது அரசி யல் பீடக் கூட்டத்தை கூட்டி இந்தப் பொது வேட்பாளர் என்ற விடத்தைத் தொடர்ந் தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும், எங்களுடன் இணைந்து செயற் பட்டுக் கொண்டிருக்கக் கூடிய தமிழ் சிவில் அமைப்புகள், கட்சிகள் அனைத்தையும் இணைத்து இந்த விடயத்தை முன்னெடுத் துச் செல்ல வேண்டும் என்றும் நாங்கள் முடிவெடுத்திருக்கின்றோம்.

இதைப் போலவே ஏனைய கட்சிகளும் தங்கள் கட்சிகளின் உயர் பீடங்களைக் கூட்டி தமது முடிவுகளை இன்னும் சில தினங்களில் வெளியிட இருக்கின்றார்கள்.

இவ்வாறு தமிழர் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரை நியமிப்பது என்ற விடயம் பல்வேறு தரப்பினரதும் ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப் படுகின்றது.

இதனடிப்படையில் சமூக மட்டத்தில் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட அமைப்பு கள், சங்கங்கள் இப்போது தமது ஆத ரவை வழங்கி வருகின்றனர். குறிப்பாக வர்த்தக சங்கங்கள், கூட்டுறவாளர்கள், மீன்பிடியாளர்கள் சங்கங்கள், விவசாய சங்கங்கள் போன்ற பல அமைப்புக ளும் முன்வந்து இன்றைக்கு ஆதரவை வழங்கியிருக்கின்றன.

அந்தவகையில் பொது வேட்பாளர் என்ற விடயத்தைப் பற்றி இப்போது அரசியல் கட்சிகள் பலவும் ஆலோசித்து வருவதுடன் அவற்றை அடுத்த கட்டத் துக்கு முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின் றார்கள்.

இங்கே ஒரு கோரிக்கையை நான் முக்கியமாக முன்வைக்க வேண்டும். தமி ழரசுக் கட்சியானது ஒரு சமஷ்டி அரசி யல் அமைப்பைத் தமது நோக்கமாகக் கொண்டு தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்ட ஒரு முக்கியமான அரசி யல் கட்சி மாத்திரமல்ல நாடாளுமன்றத் தில் தமிழர் தரப்பில் இருந்து கூடுதலான ஆசனங்களையும் வைத்திருக்கக்கூடிய ஒரு கட்சியாக இருக்கின்றது.

ஆகவே, வரக்கூடிய இந்த ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு கையாண்டால் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம், தமிழ் மக்களுடைய எதிர் காலத்தைச் சரியான பாதையில் கொண்டு செல்லலாம் என்று சிந்தித்து விரைவாக முடிவை எடுக்க வேண்டிய ஒரு பணி அவர்களுக்கு இருக்கின்றது.

ஆனால், அவற்றை அவர்கள் ஒத்தி வைத்து நாங்கள் காலம் வரும்போது முடி வெடுப்போம் என்று சொல்வது நிச்சய மாக தமிழர்களுடைய எதிர்காலத்திற்கு உகந்த கருத்துக்கள் அல்ல.

ஆகவே, தமிழ் மக்களுடைய நலன் களைக் கருத்தில்கொண்டும் தமிழ் மக்க ளுடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதைக் கருத்தில்கொண்டும் தமிழ் மக்களுடைய எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும் தமிழரசுக் கட்சியானது ஒரு சரியான முடிவை மிக மிக விரைவாக எடுத்து எல்லோருடனும் இணைந்து பயணிப்பதானது தமிழ் மக்களுக்கு நிச்சயமாக தேவையான ஒரு விடயமா கவே நாங்கள் கருதுகின்றோம்.

இந்தநிலையில் பொது வேட்பாளர் விவகாரத்தைத் தனிப்பட்டவர்களாக எதிர்த்தும் ஆதரித்தும் கருத்துக்கள் சொல்வது என்பதை மாற்றி கட்சியாக முன்னெடுத்துச் செல்வது என்பது இந்தக் காலத்தினுடைய அவசியம் என்பதைப் புரிந்துகொண்டு தமிழரசுக் கட்சி செயற்பட வேண்டும் என்பது எமது தாழ்மையான கருத்தாகவும் வேண்டுதலாகவும் முன் வைக்க விரும்புகின்றோம்.

மேலும், தமிழரசுக் கட்சியில் இருக்கக் கூடிய ஒரு சிலர் குறிப்பாக சிவஞானம் போன்றோர் ஒரு பொது வேட்பாளரை நாங்கள் தேடுகின்றபோதே இந்த விடயம் முடங்கிப் போய்விடும் என்றும், இந்த வேலைகள் எல்லாம் முடக்கப்பட்டுவிடும் என்றும், இது அடுத்த கட்டத்தை நோக்கி நகராது என்ற பாணியிலும் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

உண்மையாகவே இந்த முயற்சி என்பது தோற்றுப் போக வேண்டும் என்று பல பேர் விரும்புகின்றார்கள். அதில் சீ.வீ. கே. சிவஞானமும் ஒருவராக சில சமயம் இருக்கலாம். ஏனென்றால் இந்த இந்த விடயம் வெற்றிகரமாக நகருமாக இருந் தால் சிங்களத் தரப்பு மாத்திரம் அல்ல சர்வதேச சமூகம் கூட அந்த ஆணை யைப் பற்றி சிந்திக்க வேண்டிய ஒரு சூழல் ஏற்படும்.

ஆகவே, ஏதோ ஒரு வகையில் இத னைக் குழப்புவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. இது மேலும் நகரக் கூடாது, முடக்கப்பட வேண்டும் என்றும் சிந்திக்கிறார்கள். இவ்வாறு இதனை முடக்கினால் சந் தோசப்படுவதற்கும் சில பேர் இருப்பதா கத்தான் எங்களுக்குத் தோன்றுகின்றது.

இதில் முக்கியமான விடயம் என்ன வென்றால் பொது வேட்பாளர் என்ற விடயம் இப்போது முன்னோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றது. கட்சிகளில் ஓரிரு வரைத் தவிர மற்றைய அனைவரும் இதற்குப் பின்னால் இருக்கின்றார்கள்.

இதிலும் முக்கியமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது ஜனாதிப தித் தேர்தலைப் பகிஷ்கரிப்புச் செய்ய வேண்டும் என்று இப்போது ஒரு துண்டுப் பிரசுரம் அடித்து வெளியிடுவது மாத்தி ரம் அல்லாமல் இந்த முயற்சிகளுக்கு எதிரான கட்டுக்கதைகளையும் அவர்கள் அவிழ்த்துவிட்டு வருகின்றார்கள்.

இன்னும் சில பேர் பகிஷ்கரிப்பும் பொது வேட்பாளரும் ஒன்றுதான் என்ற விதமான கருத்துக்களையும் சொல்லி வருகின்றார்கள். உண்மையில் பகிஷ் கரிப்பும் பொது வேட்பாளரை நிறுத்து வதும் ஒன்றல்ல. இந்தத் தேர்தலுக் கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை. இந்தத் தேர்தலுக்கு நாங்கள் வாக்களிக்க வேண்டும் என்று அவசியமில்லை என்ற கருத்தைத்தான் அவர்கள் முன்வைக்க முயற்சிக்கின்றார்கள்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் என்பது இலங்கையில் நடக்கக்கூடிய தேர்தல். இலங்கை என்ற நாட்டுக்குள் தமிழர், முஸ்லிம், சிங்களவர் என்ற அனைவரும் வாழ்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலை யில் இந்தத் தேர்தலுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்வது முதலா வதாக அர்த்தமற்ற விடயம்.

இரண்டாவதாக இந்தத் தேர்தலை நாங் கள் ஏன் பாவிக்க விரும்புகின்றோம் என்றால் முக்கியமாக இலங்கையில் இருப்பது வெறுமனே ஒரு பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம்தான், அந்தப் பொரு ளாதாரப் பிரச்சினை தீர்ந்து விட்டால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்று அரசு இலங்கையிலும் வெளி உலகத்துக்கும் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

எனவே, புரையோடிப் போயிருக்கின்ற தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது என்பதை உலகறியச் செய்யவும், சிங்கள மக்களுக்குப் புரிய வைக்கவும் வேண்டும்.

இந்நிலையில், தமிழ்ப் பொது வேட்பா ளர் என்ற விடயமும் பகிஷ்கரிப்பு என்ற விடயமும் ஒன்றல்ல. ஆனால், இரண்டும் ஒன்று என்று தமிழ் மக்களை ஏமாற்று வதற்கான ஒரு முயற்சியை இந்தத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் செய்கின்றார்கள்.

மேலும் பகிஷ்கரிப்பால் எதனையுமே சாதிக்கப்போவது கிடையாது. வெறுமனே துண்டுப்பிரசுரங்களை அடித்து அனைத்து மக்களுக்கும் கொடுத்து விடலாமே தவிர இந்தப் பகிஷ்கரிப்பின் மூலம் நிச்சய மாக எதனையுமே சாதிக்கப்போவது கிடை யாது.

அத்தோடு மக்களை வாக்களிக்க வைக்கவே பொது வேட்பாளர் என்ற விடத்தை நாங்கள் எடுத்துள்ளதாகவும் தமிழ்த் தேசிய முன்னணியினர் சொல்கின் றார்கள். உண்மையில் பொது வேட்பா ளரை நிறுத்துகின்றபோது மக்கள் போக வேண்டும் என்பதும், அவர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதும் மிக மிக முக்கியமான விடயம்.

பொது வேட்பாளர் என்ற விடயத்தை நாங்கள் முன்னெடுக்கக்கூடிய நிலையில் ஆதரவு கோரி இன்னும் சில தினங்களில் ஜே.வி.பி.யினர் யாழ்ப்பாணம் வருகின் றார்கள். அதேபோல் மற்றவர்களும் இங்கு வரவிருக்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத் தில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இந்தக் கால நேரத்தை நாங்கள் சரியான முறையில் கையாள வேண்டும் என்பது முக்கியமான விடயம்."

– என்றார்.

## இந்தியாவில் இருந்து

# தலைமன்னாருக்குச் சட்டவிரோதமாக வந்த இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேர் சிக்கினர்

## படகோட்டிகள் இருவரும் கைது



**(எஸ்.ஆர்.லெம்பேட், நா.லோகதயாளன்)**

இந்தியாவின் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த ஐவர் உட்பட 7 பேர் தலைமன்னாருக்குள் உள்நுழைந்த வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று தங்கியிருந்து அங்கிருந்து இரகசியமாகத் தப்பி சட்டவிரோதமான முறையில் படகு மூலம் தலைமன்னார் வந்த சமயமே இன்று அதிகாலை ஒரு மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம்சென்னையில்உள்ளமுகாம்களில் தங்கியிருந்த ஐவர் அங்கிருந்து மதுரை வந்து மதுரையில் இருந்து இராமேஸ்வரத்துக்கு பஸ்ஸில் வந்தனர். அங்கிருந்து ஒரு நாட்டுப் படகில் வந்து நடுக் கடலில் தலைமன்னாரில் இருந்து சென்ற படகில் மாறியுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து வந்த ஐவரையும் அவர்களைப் படகில் ஏற்றி வந்த இருவருமாக 7 பேரையும் கைது செய்த கடற்படையினர், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அவர்களைத் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவராக துஷார லொக்குகுமார நியமனம்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக அதன் முகாமைத்துவப் பணிப்பாளராகப் பதவி வகித்த துஷார லொக்குகுமார கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகித்த அவர் பல்வேறு அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்துள்ளதுடன் அந்த நிறுவனங்களின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளார்.



இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக நீண்ட காலம் பதவி வகித்த அவர் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் டி.வி. உப்புல் தனது பதவியை அண்மையில் இராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து இப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.

நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் செல்வி நயனா குமாரி சோமரத்னவும் கலந்துகொண்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மொட்டுக் கட்சி...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பிரபஞ்சம் ஸ்மார்ட் வகுப்பறைத் திட்டத்தின் 218 ஆவது கட்டமாக அம்பாறை, தெஹியத்தகண்டிய, சந்துன்புர தேசிய பாடசாலைக்கு 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான திறன் வகுப்பறையொன்றை வழங்கும் நிகழ்வின்போதே அவர் இவ்வாறு இணைந்து கொண்டார்.

1971ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி பிறந்த அவர், தனது உயர் கல்வியின் பின்னர் இலங்கை இராணுவ மருத்துவப் படையில் இணைந்து பணியாற்றினார்.

அம்பகவெல்ல பிரதேச வைத்தியசாலை மற்றும் அம்பாறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலத்தின் பிரதானியாகவும், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தின் பணிப்பாளராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

### காலி, மாத்தறையில்...

இரு நாட்கள் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாளை மற்றும் நாளைமறுதினம் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கல்வி அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுகளை அடுத்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டப் பாடசாலைகள் தொடர்பான அறிவித்தல் இன்னும் வெளியாகவில்லை.

### 48 மணி நேரத்துக்குள்...

அதேவேளை, மழை, வெள்ளம் மற்றும் மண்சரிவால் 23 மாவட்டங்களைச் சேர்ந்த 87 ஆயிரத்து 379 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் 119 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 23 ஆயிரத்து 706 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

களுகங்கை, நில்வளா கங்கா மற்றும் கிங் கங்கை ஆகியவற்றில் வெள்ள நீர் பெருக்கெடுத்து வருகின்றது. இதனால் சில பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

அதேவேளை, அனர்த்தங்கள் இடம்பெறும் பகுதிகளைப் பார்வையிடச் செல்ல வேண்டாம் என மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### மாமாவை வாளால்...

செய்துள்ளார் என்று மாதம்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நரசிம்ம கேசர பண்டாரநாயக்க சாம்சன் ஜயவீர என்ற 56 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சகோதரியின் மகனே இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்றும், சந்தேகநபரும் இறந்தவரின் வீட்டுக்கு அருகில் வசித்து வருகின்றார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பழைய தகராறு காரணமாக மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் மாமனாரை மருமகன் வாளால் வெட்டிக் கொலை செய்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# மின், இலத்திரனியல் கழிவுகள் கல்முனையில் இன்று சேகரிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் வேலைத் திட்டம் இன்று திங்கட்கிழமை (03) முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையும் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இந்த வேலைத் திட்டம் கல்முனை மாநகர சபை முன்றலில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட உத்தி யோகத்தர் எம்.எம்.இஸ்ஹாக்கின் நெறிப்படுத்தலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல் லாஹ், உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜூன், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம். பயாஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.அஹத், மேற்பார்வையாளர்களான எம். அத்ஹம், யூ.கே. காலிதீன், கல் முனை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எம்.எம். அர்ஷாத், எம்.எம். றினா உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இரண்டு நாள்கள் முன்னெடுக்கப் படும் இந்த வேலைத் திட்டத்தின் மூலம் வீடுகளிலும் பொது இடங்களிலும் பாவனைக்கு உதவாமல் ஒதுக்கி அகற்றப்பட்டுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுகளை மாநகர சபையின் கழிவகற்றல் வாகனங்களில் சேகரித்து முறையாக அகற்றுவதன் மூலம் சூழ லின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.எம்.இஸ்ஹாக் தெரிவித்தார்.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சஜித்தின் திறமை

'குளம் வற்றும் எனக் காத்திருந்து குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு!' என்று கூறு வார்கள்.

அதுபோலவே, கடற்கரையில் அலை வற்றிய பின்னர் குளிக்கலாம் என்று காத்திருந்தானாம் மூடன் என்ற ஒரு பேச்சு மொழியும் நம் மத்தியில் உண்டு.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து இருபது முதல் இருபத்தியைந்து எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சி பக்கம் குத்து கரணம் அடிப்பர், அதன் பின்னர் ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடுவது பற்றிய அறிவிப்பை ஆரவாரமாக விடுத்து, களத்தில் இறங் குவார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று பிராசாரப்படுத்தப்படுவதும் இத் தகைய பேச்சு மொழிகளை நிரூபிக்கும் விவகாரம் போலவே தோன்றுகின்றது.

2022 ஜூ லையில் மாற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற காலம் தொடக்கமே, இதோ ஐக்கிய மக்கள் சக்தி உடைகின்றது, பெரும்பான்மையானோர் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணைகின்றனர் என்ற புரளி தொடர்ந்து அவிழ்த்து விடப்பட்டுக் கொண்டே வந்தது. ஆனால் விடயம்தான் நடக்கவில்லை.

ஹரின் பெனாண்டோ, மனுஷ நாணயக்கார போன்ற ஓரிருவர் அமைச்சர் பதவிகளுக்காக ரணில் பக்கம் தாவினர். எனினும், இன்றுவரை ஐக்கிய மக்கள் சக்தி கட்டுக் குலையாமல்தான் இருக் கின்றது. அதன் ஐக்கியமும் வலிமையும் புது மெருகேறிக் கொண்டிருக்கின்றன தவிர, குறையவே இல்லை.

கடைசியாக கடந்த மே தினத்திலும் இப்படி ஒரு புரளி பெருமெடுப்பில் கிளப்பி விடப்பட்டிருந்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் பல எம்.பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின மேடையில் தோன்றுவர் என்ற கதை அவிழ்த்து விடப்பட்டது. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

இந்தக் கதைகளை அவ்வப்போது கேட்டு, நம்பி, ஏமாந்து போன இப் போதைய ஆளும் கட்சியும், ஜனாதிபதி பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து, இப்போது வரை அவரது அதிகாரத்திற்கு முண்டு கொடுத்து நிற்கும் மொட்டுக் கட்சி கூட, அப்படி பிரதான எதிர்க்கட்சியைப் பிளந்து ஐக்கிய தேசிய கட்சி பக்கம் அவர்களை வரச்செய்யும் திராணி - செல்வாக்கு - இருந்தால் அதனை அடுத்த இரண்டு வாரத்துக்குள் செய்து காட்டுங்கள் என்று ஜனாதிபதி ரணில் தரப்புக்கு கால அவகாசம் வழங்கி விட்டது. ஆனால் அப்படி எதுவும் நடப்பதாக தெரிய வில்லை.

இப்போதைய நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையுடன் முரண் பட்டு நிற்கும் ராஜித சேனாரத்ன எம். பியும், சரத் பொன்சேகா எம்.பியும் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் சேரலாம் என்று கூறப்பட்டாலும் அவர்களும் சற்று பின்னடிப்புடன்தான் இருக்கின்றார்கள் எனத் தெரிகிறது.

இப்படி பிரதான எதிர்க்கட்சியில் பிளவு வரலாம் என்ற வதந்தி கிளப்பப்பட்டுக் கொண்டிருக்கையில், அரசுத் தரப்பில் மொட்டுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் பாய்ந்துள்ளார் என்று தகவல் வெளியாகி இருக்கின்றது.

வரும் ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சியின் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை இல்லை. இந்தப் பின்புலத்தில் மொட்டுக் கட்சியுடன் சேர்ந்து ரணில் விக்கிரமசிங்க வேட்பா ளராக நின்று வெற்றியீட்டக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்ற கருத்து நிலை உறுதியானால், மொட்டு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கங்களில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் பாயும் நாடா ளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிர முகர்களின் எண்ணிக்கைதான் திடீரென அதிகரிக்கும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

சஜித் பிரேமதாஸ தேர்ந்த - சிறந்த - அரசியல்வாதியோ, இல்லையோ ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி, ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கி, அதனை கட்டுக்கோப்புள்ள ஒரு கட்ட மைப்பாக இன்று வரை வெற்றிகரமாகப் பேணி வருகின்றார். தேர்ந்த அரசியல்வாதி - நரி தந்திரசாலி - என்றெல்லாம் கூறப் பட்ட ரணில் விக்கிரமசிங்கவினால் நிறைவேற்றுதிகார ஜனாதிபதிப் பதவியை - அதிகாரத்தை - வைத்திருந்தும் கூட ஐக்கிய மக்கள் சக்தியை உலுப்பக்கூட முடியவில்லை என்பதுதான் உண்மை.



# அறநெறிப் பாடசாலைக்கு 13 லட்சம் ரூபா செலவில் கட்டடம் அமைத்து வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 13 லட்சம் ரூபா செலவில் அறநெறி பாடசாலைக்குக் கட்டடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தின் திறப்பு விழா நிகழ்வு நேற்று (02) இடம்டிபெற்றுள்ளது.

வவுனியா வெங்கல சட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கணேசபுரம் கிராமத்தின் ஸ்ரீசித்தி விநாயகர் அறநெறி பாடசாலைக்கே இந்தக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலைத் தலைவர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் முதல் நிகழவாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு விழா மண்டபம்வரை அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலைக் கட்டட கல்வெட்டைத் திரை நீக்கம் செய்து வைத்துத் தொடர்ந்து கட்டடத்தையும் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து கட்டடத்தில் பால் காச்சப்பட்டு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.




இதில் மங்கல சுடர்களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், சமூக செயற்பாட்டாளர் தயாபரன், வெங்கல செட்டிக்குளம் பிரதேச இந்து கலாசார உத்தியோகத்தர் சி.கஜேந்திரகுமார், வெங்கல செட்டி குளம் பிரதேச செயலகத்தை சேர்ந்த மு.சுயேந்திரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து வரவேற்பு நடனம், வரவேற்பு உரை இடம் பெற்றதை தொடர்ந்து அறநெறி பாடசாலை மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சி கள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் சந்நிதியன் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், சமூக செயற்பாட்டாளர் தயாபரன், வெங்கல செட்டிக்குளம் இந்து கலாசார உத்தியோகத்தர் சி.கஜேந்திரகுமார், மற்றும் வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகத்தை சேர்ந்த ம.சுஜேந்திரன், கணேசபுரம் கிராம அமைப்புக்களின் நிர்வாகிகள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.







# பசறை, கிக்கிரிவத்தை கதிர்வேலாயுதர் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா!

(ந.மலர்வேந்தன்)

நூற்றாண்டு பழைமை வாய்ந்த பசறை, கிக்கிரிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா இன்று (03) திங்கட்கிழமை பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பமாகி பூஜை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

நாளை (04) செவ்வாய்க்கிழமை எண்ணெய்காப்பு சாத்துதல் நடைபெறும். நாளை மறுதினம் (05) புதன்கிழமையன்று கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நடைபெறவுள்ளது.

சிவாகம சக்கரவர்த்தி வேதாகம வித்தியாபதி சிவஸ்ரீ மஹாதேவ ஸ்ரீவத்சாங்க குருக்கள் தலைமையில் சர்வ சாதகமும், சிவாகம கிரியா திலகம் ஜெயராம் நிதர்சன் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகவும் கிரியைகளை ஆற்றுகின்றனர். சித்தர்களின் குரல் அமைப்பின் ஆசியுடன் நடைபெறும் கும்பாபிஷேக பெருவிழாவில் உலகப் புகழ் நாதசக் கரவர்த்தி ஈழுநல்லூர் பி.பாலமுருகன் தலைமையிலான குழுவினரின் மங்கள நாதம் இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

இதன்போது தவில் சக்கரவர்த்தி ஈழநல்லூர் செந்தில்நாதன், இளம் நாதஸ்வர வித்துவான் பாலமுருகன் சாரங்கன், இளம் இசை வயலின் வித்தகர் இராசரத்தினம் நிரோஷன், வீணை வாத்திய சிதம்பரம் இசைமைந்தன் பத்மநாதன் சிவமைந்தன், மிருதங்கங்க இசை வித்தகர் சுரளிதரன் சுலக்ஷன் ஆகியோரும் பக்தி இசை நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.



# சாரணர் சங்க கொழும்பு கிளையின் 110 வருட நிறைவில் சைக்கிள் ஓட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை சாரணர் சங்க கொழும்பு கிளையின் 110 வருடங்களைக் கொண்டாடும் வகையில் சைக்கிள் ஓட்டம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு மாவட்ட சாரணர் ஆணையாளர் அமில அபேசுந்ர ஏற்பாட்டில் உதவி சாரண ஆணையாளர், அபிவிருத்தி மற்றும் வலயம் 07 கொழும்பு சாரணர் தலைவர்கள் மற்றும் கொழும்பு சாரணர் புகைப்படம் மற்றும் காணொலிக் கழகம், சூரிய பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர்.

தெஹிவளை ஸ்டேஷன் மரைன் டிரைவ் வீதியில் ஆரம்பமான சைக்கிள் ஓட்டம் சாரணர் சங்க தலைமை அலுவலகம் முன்பாக நிறைவடைந்தது.

150 இளைய மற்றும் மூத்த சாரணர்கள், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் இந்தச் சைக்கிள் ஓட்டத்தில் கலந்துகொண்டனர்.





# அல்லாரையில் கசிப்பு உற்பத்தி மையம்; 50 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் மீட்பு!

(த.சுபேசன்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அல்லாரை காட்டுப் பகுதி ஒன்றில் சனிக்கிழமை (01) இரவு கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது. இதன்போது அங்கிருந்த 50 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரணசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது. இருப்பினும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய காஸ் சிலிண்டர் உள்ளிட்ட பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.





# கரைவாகுபற்று வொலிவேரியன் பாலத்தின் முதற்கட்ட திருத்தப் பணி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஓ.ஜீ. அமைப்பின் வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கல்முனை மாநகர சபையின் ஒத்துழைப்புடன் கரைவாகுபற்று வொலிவேரியன் பாலத்தின் முதற்கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பாலம் மிக நீண்ட நாள்களாகத் துருப்பிடித்து ஓட்டை விழுந்து பொது மக்கள் பயணிக்க முடியாத மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது.

இந்த விடயமாக பலரிடம் தெரிவித்தும் இதனை செப்பனிட முடியாத நிலையில் ஓ.ஜீ.அமைப்பினர் இதனை முன்னின்று செயல்படுத்தியுள்ளனர்.

ஓ.ஜீ. அமைப்பின் செயற்பாட்டுக்குப் பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.



# காக்கயங்குளம் பகுதியில் வீதிக்குக் கார்பெட் போடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் மூலம் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளின் பேரில் மன்னார் காக்கயங்குளம் பகுதியில் 2 கிலோ மீற்றர் கார்பெட் வீதி அமைக்கும் வேலைத் திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

அந்த இடத்துக்கு விஜயம் செய்த இராஜாங்க அமைச்சர் நிலமைகளைப் பார்வையிட்டார். இந்த வீதியானது ஒரு சில வாரங்களில் உத்தியோ பூர்வமாக மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்படவுள்ளது என்று குறிப்பிட்டார்.






# வீரத்திடல் அல் ஹிதாயா ம.வித்தி. மாணவிகள் நால்வருக்குப் பாராட்டு

(எம். எப். றிபாஸ்)

உயர்தர பரீட்சையில் வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் முதல் முறையாக நான்கு மாணவர்கள் மூன்று ஏ சித்தி பெற்று பல் கலைக் கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்த மாணவர்ளைப் பாராட்டிக் கௌரவிப்பதற்காக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையிலான குழுவினர் மாணவிகளின் வீடுகளுக்குச் சென்று கௌரவித்தனர்.

எம்.எஸ்.எப்.ஹஸ்னா, என்.ஷப்னம் சேபா, எம்.எப். நப்றினா, ஏ.ஏ.எப். அனீசா ஆகிய மாணவிகளே இவ்வாறு பல்கலைக்கழகத்துக்கு தெரிவானவர்கள் ஆவர்.








# இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து களம் கொடுத்த கலாசூரி சிவகுருநாதன்!

## பேர்த் மாநகரில் பேராசிரியர் அமீர் அலி உரை



இலங்கையில் இளம் படைப்பாளிகளின் படைப்புகளைத் தினகரனில் தொடர்ந்து வெளியிட்டு, தமிழ் இலக்கியத்துக்குப் பெருந்தூணாக விளங்கியவர் கலாசூரி சிவகுருநாதன். அத்தோடு இலங்கை இளம் எழுத்தாளர்களை ஜாதி, மத, இன, பேதமின்றி ஊக்குவித்து வந்தவர். இந்த நாட்டின் முக்கிய தேசிய பத்திரிகையின் ஆசிரியராக இருந்தும் மிக எளிமையாக உறவாடியவர்.

பேர்த் நகரில் நடைபெற்ற 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூல் வெளியீட்டில் பேராசிரியர் அமீர் அலி இவ்வாறு உரையாற்றினார்.

இலங்கை தமிழ் கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. அவர் தினகரன் பத்திரிகை ஆசிரியர் பதவியிருந்து ஓய்வு பெறும்வரை எந்த விதமான மாற்றமும் ஏற்படவில்லை.

இலங்கையில் ஆகக் கூடுதலான காலம் பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் பதவியை வகித்து சாதனை புரிந்த இவர், இன நல்லிணக்கத்துக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டார்.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்றுவரை எவராலும் மறக்க முடியாது உள்ளது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும் என்றும் தெரிவித்தார்.

மேற்கு ஆஸ்திரேலியா, பேர்த் மாநகரில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் நேற்று முன்தினம் (01) மூத்த தமிழ் எழுத்தாளரும் இலக்கிய ஆர்வலருமான டாக்டர் அமீர் அலி தலைமையில் வெளியிடப்பட்டது.

'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலை ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்துள்ளார்.

இளம் தலைமுறையினரும் எழுத்தாளுமைகளை அறியும் வண்ணம், இந்த நிகழ்வின் ஆரம்ப வரவேற்புரையை மாணவன் கௌசிக்ராஜ் கதிர்காமன்குமார் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார். அதன்பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்த நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவண காப்பாளருமான கோபிநாத் தில்லைநாதன் ஆற்றினார்.

நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்கினார். அத்துடன் கன்பராவில் இருந்து இலக்கிய ஆர்வலர் மயூரன் சின்னத்துரை, இலங்கையில் இருந்து மூத்த கல்வியியல் பணிப்பாளர் தணி காசகம்பிள்ளை ஆகியோர் காணொலி மூலம் உரையாற்றினர்.

இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கிய இலக்கிய ஆர்வலர் ராஜன் வடிவேல் நன்றியுரை நிகழ்த்தினார்.






# சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரிக்கு நிதி ஒதுக்கினார் ஹரீஸ் எம்.பி.

(சர்ஜுன் லாபீர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் உள்ள சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவைக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச் எச்.எம்.எம். ஹரீஸ் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக் கீடு செய்துள்ளார்.

ஜனஸா நலன்புரி மக்கள் பேரவை யின் தலைவர் அஸ்வர் அப்துல் சலாம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ் வில் ஆலோசகர் மௌலவி எம்.சலீம், உப தலைவர் எஸ்.எச்.எம் ஜிப்ரி, செய லாளர் யூ.கே காலிதீன், பொருளாளர் எஸ்.எம் நசீர், ஆலோசகர் எம். நாஸர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ. பாவா உட்பட ஜனஸா நலன்புரி மக்கள் பேரவையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.








# கல்முனை ஸாஹிறாவில் மரம் நடுகை நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரியில், சாய்ந்தமருது இளங்கலை பட்டதாரிகள் அமைப்பால் மரங்கள் நடப்பட்டுள்ளன.

எதிர்கால சந்ததியினரான மாணவர் சமூகத்துக்குப் பசுமையான உலகத்தை வழங்கும் முக்கியமான படியாக மர நடுகை, சூழலைப் பாதுகாத்தல் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வு அனைத்து பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தால் இலங்கையிலுள்ள பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் மற்றும் இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் கீழ் நாடு தளுவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். ஆசிரியர்களான எம்.ஐ.எம்.அமீர்,ரீ.கே.எம்.சாகீர், திருமதி எஸ்.எச்.எம். உம்மு இமான், இஸட்.ஏ.ஜின்னா, திருமதி ஐ.எல்.எஸ்.நஜீமா ஆகியோரும் சாய்ந்தமருது இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் சார்பாக அமைப்பின் தலைவர் ஏ.ஜி.எம்.இக்லாஸ், எம்.என்.எம்.ஏ.இன்பாஸ், எம்.எம்.எம். முஸ்தாக் முபாறக், ஏ.எம்.சியான், எல்.எம்.அஸ்பாக், எம்.எம்.ஏ.சிபாக் அப்ரின், ஏ.எம்.நுஸ்னான், ஏ.எம்.எம்.ஆதில், ஏ.ஆர்.எம்.அப்ரார் மற்றும் கல்லூரி மாணவர்கள் இந்த நிகழ்வில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.




# மண்முனைப்பற்று பிரதேச மட்ட கால்பந்து விளையாட்டுப் போட்டி!

(பழுவூரான்)

மண்முனைப்பற்று பிரதேச செயலக மட்ட கால்பந்து விளையாட்டுப் போட்டி மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி தெட்சணகௌரி தினேஷ் தலைமையில் பாலைமுனை முஹைதீன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களமும் மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

பாலமுனை முஹைதீன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் காங்கேயன் ஓடை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் விறுவிறுப்பாக இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முஹைதீன்ஸ் விளையாட்டுக் கழகம் 02 கோல்களைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.



இதன் போது வெற்றி பெற்ற வீரர்களுக்கு அதிதிகளால் விருதுகளும், பணப் பரிசிக்களும் வழங்கப்பட்டன.

உதவிப் பிரதேச செயலாளர் திருமதி லோகினி விவேகானந்தராஜ், ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வி.குணராஜசேகரம், சுகாதார வைத்திய அதிகாரி ரீ.திலக்ஷன் உயர் அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அதிதிகளால் பயன் தரும் மரங்கள் மைதானத்தில் நடப்பட்டன.



# ஒலுவில் மீனவர்களுக்கு 100 வாடிகளும் மின்சாரமும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

(எம். எப்.நவாஸ்)

ஒலுவில் மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டு அறிவதற்காக நாடாளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான ஏ.எல்.எம் அதாவுல்லாவின் தலைமை யில் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த டி சில்வா ஆகியோர் நேற்று அங்கு விஜயம் செய்தனர்.

இக்கலந்துரையாடலில் மீனவர்களின் குறைபாடுகளை கேட்டு அறிந்த டக்லஸ் தேவானந்தா அவர்கள் மிக விரைவில் மீனவர்களுக்கான 100 வாடிகளை அமைத்து தருவார் என்றும் அவர்களுக்கான மின்சார இணைப்பையும் பெற்று தருவார் எனவும் வாக்குறுதி அளித்திருந்தார்.







# சர்வதேச சைக்கிள் ஓட்ட தினத்தை முன்னிட்டு மருதமுனையில் விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இன்று (03) சர்வதேச சைக்கிள் ஓட்ட தினமாகும். இதனை முன்னிட்டு கல்முனை பிரதேச செயலகம் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகத்தால் ஏற்பாடு செய்த சைக்கிளோட்ட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று மருதமுனையில் இடம் பெற்றது.

ரைடர்ஸ் கழகத்தின் தலைவர் கலீல் கபூர் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு சைக்கிளோட்டம் மருதமுனை பிரதான வீதியில் ஆரம்பமாகி, கல்முனை நகர் சென்று பின்னர் கல்முனை கடற்கரை பள்ளி செல்லும் பிரதான வளைவின் ஊடாக மீண்டும் கல்முனை நகர் வழியாக பாண்டிருப்பு, மருதமுனையை வந்தடைந்தது.



பின்னர் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து தினமும் சைக்கிளை போக்குவரத்துக்காக பயன்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்கள்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர். எம்.அஸ்மி, டாக்டர் பௌஸாத் உட்பட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், ரைடர்ஸ் சைக்கிளிங் அணியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த சைக்கிள் ஓட்ட நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் ஆரோக்கிய வாழ்வின் அவசியத்தை வலியுறுத்தி இலை கஞ்சி வழங்கப்பட்டது.





# காத்தான்குடி குபா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான முகாம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காத்தான்குடி குபா விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் காத்தான்குடி அல் ஹிறா மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

காத்தான்குடி ஆதார வைத்திய சாலையின் இரத்த வங்கிக்கு குருதி வழங்கும் பொருட்டு இந்த இரத்ததான முகாம் இடம்பெற்றது.

குபா விளையாட்டு கழகத்தின் தலைவர் சுஜாத் அஹமத் தலைமையில் நடைபெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி வைத்திய அதிகாரி மற்றும் அதன் தாதியர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி குபா விளையாட்டு கழகத்தின் செயலாளர் சுஜா உட்பட அதன் உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். இந்த இரத்ததான முகாமில் இளை ஞர்கள், யுவதிகள், பொது மக்கள், விளையாட்டுக்கழகத்தினர் கலந்து கொண்டனர்.



# பீகார் முதல்வர் பதவி பா.ஜ.கட்சிக்கு; மத்திய அமைச்சராகிறார் நிதிஷ்குமார்

புதுடெல்லி,ஜூன்03

மக்களவை தேர்தல் முடிவுகள் நாளை வெளியாகும் நிலையில், பிரதமர் மோடியை பீகார் முதல்-மந்திரி நிதிஷ்குமார் சந்தித்து பேசி உள்ளார். பிரதமர் மோடியை சந்தித்த நிதிஷகுமார் இன்று மாலையில் மத்திய மந்திரி அமித்ஷாவை சந்திக்க இருக்கின்றார் எனஜ் கூறப்படுகிறது.

இந்தநிலையில், பீகார் முதல்-மந்திரி பதவியை நிதிஷ்குமார் ராஜினாமாச் செய்ய உள்ளார் எனவும், பிரதமர் மோடி தலைமையிலான புதிய மத்திய அமைச்சரவையில் அவர் பங்கு வகிக்க இருக்கின்றார் எனவும் பீகார் அரசியல் வட்டாரத்தில் தகவல் வெளியாகி உள்ளது.

ஏற்கனவே 1999 ஆம் ஆண்டு வாஜ்பாய் அமைச்சரவையில் நிதிஷ்குமார் மத்திய மந்திரியாக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

பல ஆண்டுகளாக பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்த நிதிஷ் குமார் 2 ஆண்டுகளுக்கு முன் கூட்ட ணியை முறித்துக்கொண்டார். பா.ஜனதா கூட்டணியை உதறிவிட்டு ராஷ்டீரிய ஜனதா தளம் தலைமை யிலான மெகா கூட்டணியில் இணைந்தார்.

எதிர்க்கட்சிகள் உருவாக்கிய இந்தியா கூட்டணியில் முக்கிய பங்காற்றிய நிதிஷ்குமார் தேர்தலுக்கு 2 மாதங்களுக்கு முன் கூட்டணியில் இருந்து வெளியேறினார். இந்தியா கூட்டணியில் இருந்து வெளியேறிய நிதிஷ்குமார் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்தார்.

பா.ஜனதா ஆதரவில் மீண்டும் முதல்-மந்திரியாக பதவியேற்ற நிலையில் தற்போது முதல்-மந்திரி பதவியை பா.ஜனதாவுக்கு கொடுக்க இருக்கின்றார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

பீகார் முதல்-மந்திரி பதவியை பா.ஜனதாவுக்கு கொடுத்து விட்டு மத்திய மந்திரியாக நிதிஷ்குமார் பதவியேற்க இருக்கின்றார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

# ‘இண்டியா’ கூட்டணி வெற்றியை நாளை கொண்டாட உள்ளோம்!

## தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை



சென்னை,ஜூன்03

‘இண்டியா’ கூட்டணி வெற்றியை நாளை கொண்டாட உள்ளோம் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருக்கின்றார்.

கலைஞரின் 101வது பிறந்தநாளை ஒட்டி, டெல்லியில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் அவரது உருவப்படத்திற்கு காங்கிரஸ் எம்.பி., ராகுல் காந்தி மற்றும் இண்டியா கூட்டணி தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்த நிலையில், டெல்லியில் இண்டியா கூட்டணி தலைவர்கள் கருணாநிதிக்கு மரியாதை செலுத்தியமையைக் குறிப்பிட்டு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பவை வருமாறு:-

‘இண்டியா’ கூட்டணி தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல்காந்தி, சீதாராம் யெச்சூரி ஆகியோர் டெல்லியில் ஒன்று கூடி முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாள் மற்றும் நூற்றாண்டு நிறைவு விழாவில் இதயப்பூர்வமான அஞ்சலி செலுத்தினர்.

கருணாநிதியை மாநில தலைவராக மட்டுமின்றி தேசிய அளவிலான தலைவராகப் போற்றி வணங்குகிறோம். தேசக் கட்டுமானத்தில் முக்கியப் பங்காற்றிய கலைஞர், கூட்டாட்சி மற்றும் மக்களாட்சிக்காக குரல் கொடுத்தவர்.

பல பிரதமர்கள், குடியரசுத் தலைவர்களை முடிவு செய்ததில் முக்கியப் பங்கு வகித்தவர் கலைஞர்.

நமது கூட்டணியின் வெற்றியை - இந்திய மக்களுக்கான வெற்றியை - கொண்டாட ஆவலுடன் காத்திருக்கிறோம். -இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# ஊடக முதலாளியான முர்டோக் 93 வயதில் ஐந்தாவது திருமணம்!

## 67 வயதுக் காதலியைக் கடைப்பிடித்தார்

வொஷிங்டன்,ஜூன்03

'தீ வோல் ஸ்டிரிட் ஜர்னல்', 'பாக்ஸ் நியூஸ்' போன்ற அமெரிக்க செய்தி ஊடகங்களின் உரிமையாளராக இருந்தவர் ரூபர்ட் முர்டோக் (வயது 93). அவர் தற்போது ஐந்தாவது திருமணத்தைச் செய்திருக்கின்றார்.

முர்டோக் தனது உலகளாவிய ஊடக கட்டுப்பாட்டை கடந்த ஆண்டு நவம்பரில் தனது மகன் லாச்லனிடம் ஒப்படைத்தார்.

இந்நிலையில், ரூபர்ட் தனது நீண்ட நாள் காதலியான எலெனா ஜுகோவாவை (வயது 67) திருமணம் செய்து கொண்டுள்ளார் எனத் தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார். இந்த திருமண நிகழ்வானது கலிபோர்னியாவில் உள்ள தனது பங்களாவில் நடைபெற்றதாகவும் அதில் அவர் தெரிவித்திருந்தார்.

எலெனா ஜுகோவா ஓர் ஓய்வு பெற்ற மூலக்கூறு உயிரியலாளர் ஆவார். முர்டோக்கும் அவரது காதலிக்கும் இடையே ஆன வயது வித்தியாசம் 25 வருடங்கள். இது முர்டோக்கினுடைய ஐந்தா வது திருமணம் என்பது குறிப்பிடத்தக்கது.



ரூபர்ட் முர்டோக்கின் முதல் மனைவி பெடிர்கா புக்கர். ஆஸ்திரேலியாவை சேர்ந்த இவர் விமான பணிப்பெண் ஆவார். இவரை 1956 ஆன் ஆண்டு ரூபர்ட் திருமணம் செய்தார். இந்த தம்பதிக்கு 6 குழந்தைகள் உள்ளனர். கருத்து வேறுபாடு காரணமாக 1967 ஆம் ஆண்டு முதல் மனைவியை ரூபர்ட் விவாகரத்து செய்தார்.

இதனை தொடர்ந்து 1967ஆம் ஆண்டு அனா டெவோ என்ற செய்தி வாசிப்பாளரை ரூபர்ட் இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். இவருடன் ரூபர்ட் 32 ஆண்டுகள் வாழ்ந்தார். பின்னர், கருத்துவேறுபாடு காரணமாக 2 ஆவது மனைவி அனாவை ரூபர்ட் கடந்த 1999 ஆம் ஆண்டு விவாகரத்து செய்தார்.

இதையடுத்து, வெண்டி டங்க் என்பவரை ரூபர்ட் 1999 ஆம் ஆண்டு 3 ஆவது திருமணம் செய்தார். அவரையும் கடந்த 2013 ஆம் ஆண்டு ரூபர்ட் விவாகரத்து செய்தார். இதனையடுத்து, 2016 ஆம் ஆண்டு ஜெர்ரி ஹால் என்பவரை ரூபர்ட் 4 ஆவது திருமணம் செய்தார். ஆனால், கருத்து வேறுபாடு காரணமாக ஜெர்ரியை கடந்த 2022 ஆன் ஆண்டு ரூபர்ட் விவாகரத்து செய்தார். ஒட்டுமொத்தமாக 4 திருமணங்கள் செய்த ஜெர்ரிக்கு மொத்தம் 6 குழந்தைகள் உள்ளனர்.

தற்போது தனது 93 வயதில் 5 ஆவது திருமணம் செய்துள்ள ரூபர்ட் தம்பதியருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

# பிரதமர் நெத்தனியாகுவுக்கு எதிராகவும் இஸ்ரேலின் டெல் அவிவில் போராட்டம்

டெல் அவிவ்,ஜூன்03

காசா போரை இஸ்ரேல் அரசு கையாளும் விதத்திற்கு கண்டனம் தெரிவித்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு இஸ்ரேல் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தினர்.

பாலஸ்தீனத்தின் காசா நகரை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் நாட்டின் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். அதோடு வெளிநாட்டினர் உள்பட சுமார் 250 பேரை ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இதை தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பை அடியோடு ஒழித்து, பணய கைதிகளை மீட்போம் என சூளுரைத்து காசா மீது இஸ்ரேல் போரைத் தொடங்கியது. இந்தப் போர் கடந்த 7 மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஹமாஸ் அமைப்பை அழிக்கும் வரை போர்நிறுத்தம் ஏற்படாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியாக தெரிவித்துள்ளார்.

அதே சமயம், இந்த போரில் காசா நகரம் முழுவதும் சின்னாபின்னமாகி உள்ளது. அங்கு 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகி



உள்ளனர். மேலும் 78 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். அதோடு, லட்சக்கணக்கான மக்கள் உணவு, குடிதண்ணீர் போன்ற அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் பரிதவித்து வருகின்றனர்.

இந்தப் போருக்கு சர்வதேச அளவில் எதிர்ப்புகள் கிளம்பி வரும் நிலையில், காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் கொண்டு வர வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகள் இஸ்ரேல் அரசை வலியுறுத்தி வருகின்றன. ஆனால் இஸ்ரேலிராணுவம் காசாவில் உள்ள ரபா உள்ளிட்ட நகரங்களில் போரை தொடர்ந்து தீவிரப்படுத்தி வருகிறது.

இதனிடையே பணயக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் அமைப்புடன் இஸ்ரேல் அரசு ஒப்பந்தம் மேற்கொள்ள முன்வர வேண்டும் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வலியுறுத்தினார்.

இந்த நிலையில், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸார் தண்ணீரொ பீய்ச்சி அடித்து போராட்டக்காரர்களைக் கலைக்க முயன்றனர். அப்போது இருதரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் அங்கு பரபரப்பான சூழல் நிலவியது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காசா போரை இஸ்ரேல் அரசு கையாளும் விதத்திற்கு கண்டனம் தெரிவித்து முழக்கங்களை எழுப்பினர். மேலும் பணயக் கைதிகளை விடுவிக்கும் ஒப் பந்தத்தை இஸ்ரேல் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

பக்கங்கள் - 4

# கனடா முரசு

திங்கட்கிழமை 03/06/2024

## தேடப்பட்ட நபர் கனடாவில் கைது

கனடாவில் மிக வும் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார். C2 ▶




# இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்த விரும்புகின்றார் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர்

## தமது அரசில் அது நடக்கும் என்று அவர் அறிவிப்பு

கனடாவின் கன்சர்வேடிவ் தலைவர் இந்தியா வுடன் வர்த்தகத்தை விரிவுபடுத்த அதிக ஆர்வம் காட்டியுள்ளார்.

கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொய் லிவ்ரே இந்தியாவுடனான வர்த்தக உறவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளார்.

குறிப்பாக கனடாவின் இயற்கை எரிவாயு, யுரேனியம் மற்றும் பருப்பு போன்றவற்றை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யவேண்டும் என நினைக்கிறார்.

மிசிசாகாவில் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய பியர் பொய்லிவ்ரே, “நம் நாட்டிற்காக வும் நமது நலன்களுக்காகவும் நிற்பதே எனது முன்னுரிமை. நமது இயற்கை எரிவாயுவை இந்தியாவிற்கு விற்க விரும்புகிறேன்” என்று கூறினார். C2 ▶





## முதியவர்களைக் கவர்ந்திழுக்கும் கஞ்சா கலந்த இனிப்பு வகைகள்

கனடாவில் முதியவர்கள் கஞ்சா போதைப் பொருள் பயன்பாட் டினால் அபாயங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரி விக்கப்படுகின்றது.

கஞ்சா போதைப் பொருள் கலந்த சில இனிப்பு வகைகளை முதியவர்கள் உள்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கஞ்சா கலந்த இனிப்பு பண்டங்களை உட்கொள் வதன் மூலம் முதியவர்கள் நோய்வாய்ப்பட்டு அதிகளவு மருத் துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது

இங்கு நான்கு லட்சம் சிரேஸ்ட பிரஜைகள் கஞ்சா பயன் படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளிவிவரவியல் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கஞ்சாப் போதைப் பொருள் பயன்படுத்துவதற்கு சட்ட ரீதியான அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர், முதியவர்கள் கஞ்சா பயன் படுத்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.




## பிரிட்டிஷ் கொலம்பியாவில் மணி நேர சம்பளம் உயர்வு

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் மணித்தி யால சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி மாகாணத்தில் குறைந்தபட்ச மணித் தியால சம்பளம் 17.40 டொலர்கள் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் குறைந்தபட்ச மணித்தியால சம்பளமாக 16.75 டொலர் வழங்கப்பட்டு வந்தது. இதில் தற்பொழுது 3.9 வீத அதிகரிப்பு பதிவாகி யுள்ளது.

நாட்டின் மிகவும் குறைந்த சம்பளம் வழங்கும் மாகாணமாக காணப்பட்ட பிரிட்டிஷ் கொலம்பியா தற்பொழுது கூடுதல் சம்பளம் வழங்கும் மாகாண மாக மாற்றமடைந்துள்ளது.

பணவீக்கத்தை ஈடு செய்யக்கூடிய வகையில் சம்பளம் அதிகரிக்கப்படுவதாக மாகாண அர சாங்கம் அறிவித்துள்ளது.



# கனேடிய - சீன பாதுகாப்பு அமைச்சர்கள் பதினொரு ஆண்டுகளின் பின்னர் சந்திப்பு

கனேடிய மற்றும் சீன பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இடையில் சந்திப் பொன்று நடைபெற்றுள்ளது.

பதினொரு ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக கனேடிய பாதுகாப்பு அமைச்சர் பில் பிளயர் சீன பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் டொங் யூனை சந்தித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற ஷங்ரி லா பாதுகாப்பு பேச்சுவார்த்தையில் இரு நாடுகளினதும் பாதுகாப்பு அமைச் சர்கள் பேச்சு நடத்தியுள்ளனர்.

சீனாவினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் தலையீடுகள் குறித்து கனடா தனது கரிசனையை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக ரஷ்யாவிற்கு வழங்கப் பட்டு வரும் பொருளாதார உதவிகள் மற்றும் தாய்வானுக்கு அருகாமை யில் மேற்கொள்ளப்படும் இராணுவ பயிற்சிகள் போன்றன குறித்து கரிசனை கனடாத் தரப்பினால் வெளி யிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.

## இந்தியாவுடன்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"யேவழையெட டீயமெ-ன் ஆயின வின்படி, இந்தியாவின் வளர்ந்து வரும் மின்சாரத் தேவையுடன், அந்தத் தேவை யில் பாதியை வழங்கும் அளவுக்கு எரி வாயுவை விற்றால், கனடாவின் மொத்த உமிழ்வை விட மூன்று மடங்கு பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைக்கலாம்" என்று அவர் கூறினார்.

இந்தியா மற்றும் பிற எரிசக்தி தேவை யுள்ள நாடுகளுக்கு வழங்கக்கூடிய அளவிற்கு, கனடாவில் 1300 டிரில்லி யன் கன அடி இயற்கை எரிவாயு இருப்பு உள்ளது என்று பொய்லிவ்ரே சுட்டிக் காட்டினார்.

"இந்த எரிவாயுவை இந்தியாவிற்கும் மற்ற ஆசிய நாடுகளுக்கும் விற்க LNG திரவமாக்கல் வசதிகளை உடனடியாக அங்கீகரிக்க விரும்புகிறேன்" என்று அவர் மேலும் கூறினார்.

சிவிலியன் தர யுரேனியத்தை இந் தியாவிற்கு விற்க தனது அரசாங்கம் முயல்வதாகவும் அவர் கூறினார், அதே நேரத்தில் அந்த கனிம உற்பத்தி செய்யப்படும் சஸ்காட்செவன், கனடா வில் உள்ள மாகாணங்களில் இந்தியா வின் மிகப்பாரிய வர்த்தக பங்காளியாக உள்ளது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

கனடாவில் இருந்து இந்தியாவிற்கு பருப்பு ஏற்றுமதியை அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

"இந்திய மக்கள் யாரை அடுத்த பிரதமராக தேர்வு செய்கிறார்களோ அவர்களுடன் நான் பணியாற்றும் முன்னுரிமைகளில் அவை இருக்கும்" என்று அவர் மேலும் கூறினார்.

பொய்லிவ்ரே தலைமையிலான கன்சர்வேடிவ்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக தற்போதைய லிபரல் கட்சியை விட வசதியான முன்னிலையில் உள்ள னர்.

கருத்துக்கணிப்பு கண்காணிப்பு இணையத்தளமான 338 கனடாவின் கருத்துப்படி, இப்போது கூட்டாட்சித் தேர் தல்கள் நடத்தப்பட்டால், கன்சர்வேடிவ்கள் 43 சதவீத வாக்குகளைப் பெற்று 211 இடங்களைப் பெறுவார்கள், அதே நேரத் தில் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூ டோவின் லிபரல்ஸ் 25 சதவீதமும் 71 இடங்களையும் பெறுவார்கள்.

கனடாவின் ஹவுஸ் ஆஃப் காமன் ஸில் பெரும்பான்மை மதிப்பெண் 172. அடுத்த ஆண்டு ஒக்டோபரில் கூட்டாட்சி தேர்தல்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஒக்டோபரில், நேபாள ஊடகமான நமஸ்தே ரேடியோ டொராண்டோவுக்கு அளித்த பேட்டியில், பொய்லிவ்ரே, "இந்திய அரசாங்கத்துடன் எங்களுக்கு ஒரு தொழில்முறை உறவு தேவை. பூமியின் மிகப்பெரிய ஜன நாயக நாடு இந்தியா. எங்கள் கருத்து வேறுபாடுகள் மற்றும் ஒருவருக்கொருவர் பொறுப்புக் கூறுவது நல்லது. ஆனால் நாங்கள் ஒரு தொழில்முறை உறவைக் கொண்டிருக்க வேண்டும், நான் இந்த நாட்டின் பிரதமராக இருக்கும்போது அதைத்தான் மீட்டெடுப்பேன்" – என்று கூறியிருந்தார்.

## தேடப்பட்ட நபர்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹமில்டனில் வைத்து இந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

21 வயதான ஹபிடொன் சொலோ மொன் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் தேடப்பட்டு வருவோர் பட்டியலில் ஆறாம் இடத்தில் இந்த நபர் காணப்பட்டார் எனப் பொலிஸார் தெரி விக்கின்றனர்.

இந்த நபர் பல்வேறு குற்றச் செயல் களுடன் தொடர்புபட்டிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு 18 வயதான நபர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன் றார் எனவும் சொலொமன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.




# உலகின் பிரச்சினைகளை கனடாவுக்கு கொண்டு வராதீர் என ஃபோர்ட் சீற்றம்!

உலகின் எல்லா இடங்களிலிருந்தும் பிரச்சினைகளை தங்கள் மாகாணத்திற்குள் கொண்டு வருகின்றனர் என ஒன்ராறியோ மாகாணப் பிரதமர் டக் ஃபோர்ட் குற்றம் சுமத்துகின்றார்.

கடந்த வியாழனன்று டொராண்டோ யூத பெண்கள் பள்ளியில் துப்பாக்கிச் சூடு நடத்தியமை தொடர்பிலேயே அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

பைஸ் சாயா முஷ்கா தொடக்கப் பள்ளியின் ரப்பி யாகோவ் விடலின் மாணவர்களும் ஊழியர்களும் நடந்தவற்றைக் கண்டு தாம் அதிர்ச்சியடைந்தனர் எனக் கூறிய சில நாள்களுக்குப் பிறகு, நகரத்தில் ஒரு செய்தி மாநாட்டில் பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோவுடன் நின்றபடி ஃபோர்டு அந்த கூர்மையான கருத்துக்களை தெரிவித்தார்.

இந்தத் சூட்டுச் சம்பவம் குறித்து விசாரணை நடந்து வருவதாகவும், யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் றொறன்ரோ பொலிஸார் கூறினார்.

சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை புலம்பெயர்ந்தவர்கள் என்ற கோணத்தில் ஃபோர்ட் குற்றம் சுமத்துகின்றார். ஆனால் புலம்பெயர்ந்தவர்கள் எவரும் இதனுடன் சம்பந்தப்பட்டார்கள் என்பதற்கான எந்த அறிகுறியும் பொலிஸாரிடமிருந்து இந்த நேரம் வரை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"உங்கள் பிரச்சினைகளை உலகில் உள்ள எல்லா இடங்களிலிருந்தும் கொண்டு வருகிறீர்கள், ஒன்டாரியோவிற்கு கொண்டு வருகிறீர்கள், மற்ற கனேடியர்களைப் பின்தொடர்கிறீர்கள்"– என்றும் டக் ஃபோர்ட் குற்றம் சுமத்தினார்.

# டொரான்டோ சூட்டு சம்பவங்கள் தொடர்பில் தமிழர் ஒருவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள்




கனடா – டொரான்டோ பெரும்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் தமிழர் ஒருவருக்கு எதிராக குற்றச் சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரம்டன் நகரை சேர்ந்த 43 வயதான பிரசன்னா காலிங்கராஜன் என்பவர் மீது குற்றச் சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என யோர்க் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டொரான்டோ பெரும்பாகத்தில் அமைந்துள்ள திரையரங்க துப்பாக்கி சூட்டுச் சம்பவங்களின் இரண்டாவது சந்தேக நபராக இவர் கருதப்படுகிறார்.

டொரான்டோ பெரும்பாகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் நிகழ்ந்த நான்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக இந்த இரண்டாவது சந்தேக நபர் மீது பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த ஜனவரி 24ஆம் திகதி டொரான்டோ பெரும்பாகத்தில் உள்ள வெவ்வேறு திரையரங்குகளில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியிருந்தன.


இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி மார்கம் நகரைச் சேர்ந்த 27 வயதான அன்ட்ரூ டக்ளஸ் என்பவருக்கு எதிராக குற்றச் சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே, மே 22ஆம் திகதி தமிழரான பிரசன்னா காலிங்கராஜனுக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

எனினும், இவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் சந்தேக நபர்களை தேடி வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் குறித்த விவரங்களையும் பொலிஸார் இதுவரை வெளியிடவில்லை.

மேலும், மே 12ஆம் திகதி ஸ்காபரோவில் தமிழர்களின் திரையரங்கில் தீ வைக்கப்பட்ட சம்பவம் ஒன்றும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# எல்லைக் காவலர்களின் வேலைநிறுத்தத்தால் எல்லைப் போக்குவரத்து சீர்குலையும் ஆபத்து

எல்லைக் காவலர்கள் உட்பட கனடா எல்லை சேவை முகவர் அமைப்புக்காக பணிபுரியும் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கனடாவின் பொது சேவைக் கூட்டணி உறுப்பினர்கள் ஜூன் 6 ஆம் திகதி முதல்

வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் 90 சதவீத முன்வரிசை எல்லை அதிகாரிகள் அத்தியாவசியமாக நியமிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது வேலைநிறுத்தத்தின் போதும் அவர்கள் வேலை செய்வார்கள் எனக் கருவூல வாரியம் (திறைசேரி) தெரிவித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதே போன்ற நடவடிக்கை கிட்டத்தட்ட வர்த்தக எல்லை

தாண்டிய போக்குவரத்தை ஸ்தம்பிதப்படுத்தியது. இதனால் நாடு முழுவதும் விமான

நிலையங்கள் மற்றும் எல்லைகளில் பெரும் தாமதம் ஏற்பட்டதாகத் தொழிற்சங்கம் கூறுகிறது.

எல்லையைக் கடப்பதற்கு வழக்கமாகச் செல்வதை விட அதிக நேரம் ஆகலாம். இது

சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு பிரச்சினையாக இருக்காது, ஆனால் ஒரு நாளைக்கு 2.5 பில்லியன் டாலர் பொருள்கள் எல்லையை கடக்கும் பொருளாதாரத்தை இந்த வேலை நிறுத்தம் சீர்குலைக்கும்.

தங்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்ற சட்ட அமலாக்க முகவர்களுடன் சமமான ஊதியத்தை விரும்புகின்றனர் எனவும் மற்றப் பிரச்சனைகளான ஓய்வூதிய பலன்கள் மற்றும் “கடுமையான ஒழுக்கம்“ தொடர்பான பாதுகாப்புகள் ஆகியவையும் இக் கோரிக்கைகளில் அடங்கும் எனவும் தொழிற்சங்கத் தரப்பில் கூறப்பட்டது. இதற்காகவே வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

# கனடாவில் பெண் ஒருவரை கடத்திய நபர் கைதானார்!



கனடா, பிரம்டனில் பெண் ஒருவரைக் கடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர், பிரம்டன், கொட்ரீச் பகுதியில் வைத்து பெண் ஒருவரைத் தாக்கிப் பலவந்தமாக வாகனத்தில் கடத்திச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட பெண் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளமையுடன் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாகன தரிப்பிடத்தில் அந்தப் பெண்ணைத் தாக்கிக் கடத்திச் செல்லும் காட்சிகள் சிசிரிவி காணொளியில் பதிவாகியுள்ளன.

அதனடிப்படையில், பீல் பிராந்திய பொலிஸார் அந்த நபரைக் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.